# நாயர் சமூகத்தினரின் வாழ்வியலில் இறப்புச்சடங்குகள்

**By**

**ஹெப்சி ரோஸ் மேரி, அ.**

*இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், கேரளப் பல்கலைக்கழகம், காரியவட்டம், திருவனந்தபுரம், கேரளா, இந்தியா.*

**ஆய்வுச்சுருக்கம்**

*இந்தியாவின் தென்கோடியிலுள்ள மாநிலத்தில் ஒன்றே கேரளம். கிழக்கே தமிழகத்தையும் வடக்கே கர்நாடகத்தையும் எல்லையாகக் கொண்டு விளங்குகிறது. கேரளம் என்ற பெயர் சேரநாடு என்ற சொல்லில் இருந்து உருவானதாக அறிஞர் பெருமக்கள் கருதுகின்றனர். கேரளத்தில் பேசப்படும் மொழி மலையாளமாகும். மலையாளம் என்ற பெயர் சமீபத்தில் உருவானதாகவும் முதலில் மலையாளம் என்பது நாட்டின் பெயராக வழங்கி பின்னர் மொழியின் பெயராக வழங்கியதாகப் பரமேஸ்வர நாயர் கூறுகிறார். (2014:12). கேரளத்தின் சாதிய அமைப்பு தோன்றுவதற்குப் பிராமணர்களும் அவர்களது மதமும் காரணமாக அமைந்தது என்பதைக் கேரளத்தின் சமூக மற்றும் வரலாற்று பரிணாம வளர்ச்சியில் இருந்து அறிந்து கொள்ளலாம். பிராமணிய ஆட்சிக்கு முன்பே இங்கு தொழில் மற்றும் ஆக்கிரமிப்பின் அடிப்படையில் பிரிவு இருந்ததைச் சங்க இலக்கியத்தில் உள்ள திணையமைப்பு வாயிலாகவும் தொல்காப்பியம் கூறும் மேலோர், கீழோர் அமைப்பில் இருந்தும் உணரலாம். கேரளத்திலுள்ள நாயர் சமுதாயத்தினரின் வாழ்வியலில் காணலாகும் இறப்புச்சடங்கை ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.*

***கலைச்சொற்கள்:*** *நாயர் சமூகம், வாழ்வியல், இறப்புச்சடங்குகள்.*

## முன்னுரை

சடங்கு முறைகளுக்கு அடிப்படையாக அமைவது பழக்கவழக்கமாகும். மக்களின் வாழ்க்கையில் நடைபெறும் அனைத்துச் செயல்பாடுகளும் ஏதோ ஒரு நம்பிக்கையின் அடிப்படையில் நடத்தப்படுகிறது. மனிதனின் பிறப்புமுதல் இறப்பு வரையில் தொடர்ந்து செய்துவரும் செயல்கள் சடங்குகளாக உருப்பெறுகிறது. இச்சடங்குகள் மனிதனின் பிறப்புமுதல் இறப்பு வரை பரவி அவனுடைய வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்றுகிறது. உறவுகள் நிலைப்பதற்கும் உறவினர்கள் வந்துபோவதற்கும் உறவுப் பாலங்கள் பலப் படுவதற்கும் இத்தகைய சடங்குகள் பெரிதும் துணை நிற்கின்றன. உலகில் வாழும் ஒவ்வொரு இனத்தவருக்கும் ஒவ்வொருவிதமான பழக்கவழக்கங்களும் சடங்கு முறைகளும் காணப்படுகின்றன. அவ்வாறு கேரளவாழ் நாயர் சமுகத்திலும் பிறப்பு முதல் இறப்பு வரையிலுமான நிகழ்வுகளில் தனக்கென தனித்துவமான சடங்குமுறைகளைக் கொண்டு விளங்குகின்றனர். அவற்றுள் இறப்புச்சடங்கை இப்பகுதியில் காண்போம்.

## இறப்புச்சடங்கு

பிறப்புச்சடங்கைவிட இறப்புச் சடங்குகள்தான் மிகக் கூடுதலாகக் காணக்கிடக்கின்றன. இறந்தவர்களின் ஆன்மாவிற்கு அழிவில்லை என்ற நம்பிக்கையும் உண்டு எனவே இறந்தவர்கள் எந்தவிதமான துன்பத்தையும் தீங்கையும் தந்துவிடக்கூடாது என்ற அச்சத்தின் காரணமாகப் பலவகையான சடங்குகளைச் செய்கின்றனர் போலும். ஏதோ ஒரு காரண காரியத்திற்காக நிகழ்த்தப்பட்ட சடங்கு முறைகள் இன்று வெறும் சடங்குகளாக நின்று நிலைத்தன. புல சடங்கு முறைகள் வழக்கொழிந்தன.

ஒருவர் இறந்துவிட்டால் நாயர் சமூகத்திலுள்ள காரணவர் அல்லது வயோதிப ஆளுக்குச் செய்தியை அறிவிப்பர். தொடர்ந்து உற்றார்

உறவினர், அக்கம்பக்கத்திலுள்ளோருக்கு என செய்தி அறிவிக்கப்படும். இவ்வழக்கம் இன்று வழக்கொழிந்தது. இறந்த செய்தியைக் கெள்விப்பட்டவுடனே மக்கள் வரும் வழக்கம் உருவாகியுள்ளது. இறந்தவர்களைக் குளிப்பாட்டி புத்தாடை அணிவித்து வாசனை திரவியங்களைப் போட்டு இறந்தவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப சந்தனம், குங்கும்ம் போன்றவற்றைப் பூசி வாழை இலையில் படுக்க வைப்பர். அவ்வாழையிலையினை ஒரே ஒரு வெட்டில் வெட்டவேண்டும் என்பது வழக்கம். வாழையிலையின் நுனி கால்மாட்டிலும் காம்பு தலைப் பக்கமாக வரும் விதமாக இலையில் படுக்கவைப்பர். இறந்தவர்களின் தலை தெக்கு பக்கமாகவும் கால் வடக்கு பக்கமாகவும் இருக்க வேண்டும். தலைப் பக்கத்திலும் கால் பக்கத்திலும் விளக்கேற்றி வைப்பர். தேங்காயை உடைத்து அத்தேங்காயைச் சுரண்டி கிழிகட்டி அதாவது வெள்ளைத் துணியில் தேங்காய்துருவலை சேர்த்து கட்டி எண்ணைய் ஊற்றி சுரண்டிய தேங்காயில் வைத்து கால்மாட்டில் ஒன்றும் தலைமாட்டில் மற்றொன்றையும் எரியவைப்பர். இறந்தவர்களின் தலைமாட்டில் வாய்க்கரிசி போட்ட மீதி அரிசியும் விளக்கும் தேங்காயில் கிழிகட்டின எறிபந்தமும்,சாம்பிராணியும் கொளுத்திவைப்பது வழக்கம். வாய்க்கரிசி போடும் முன்னர் இறந்தவர்களின் மகள் முறையினர் ஒருகுடம் தண்ணிர் அல்லது கிண்டியில் தாண்ணீரை எடுத்து வீடு முழுவதும் சுற்றி அந்த தாண்ணீரைக் கொண்டுவந்து தலைமாட்டில் வைப்பர். ஒருவர் இறந்தவுடன் அம்பட்டன் என்னும் வகுப்பினர் வந்து குழிவெட்டுதல் உள்ளிட்ட சடங்குகளைச் செய்வர். அச்சடங்கிற்கான செலவினை மருமக்கள் வீட்டினர் கொடுப்பது வழக்கம். அன்றைய சடங்கு முறைக்கும் பிணத்தை எறிப்பதற்கான கூலியையும் கட்டைக்காணம் என்பர். அம்பட்டர்கள் வீட்டின் பின்புறத்தில் ஒரு குழியை வெட்டி கருங்காலி, சந்தனக்கட்டை தென்னந்தொண்டு இவற்றை அடுக்கி பிணத் தின்மீது கொஞ்சமாக களிமண்பூசி கட்டையின் மீதுவைத்து திரும்பவும் கட்டையை அடுக்குவர். இறந்தவரின் மகன் தன் தோளின் மீது குடத்தை வைத்து மூன்று முறை பிணத்தை வலம் வரவேண்டும் ஒவ்வொருமுறை வலம் வரும்போது ஒவ்வொரு வெட்டாக அம்மண்குடத்தை வெட்டி மூன்று துவாரம் இட்டு நீரை வெளியேற்றுவர். மூன்றாவது முறை தோளின் பின்புறமாக அப்பானையைக் கீழேபோட்டு உடைப்பர். அதன் பின் மூத்த மகன் கொள்ளி வைப்பான். இன்று மகன் இல்லாத பட்சத்தில் பெண்களும் கொள்ளி வைக்கும் வழக்கம் உண்டு. இன்று அம்பட்டர்கள் மிகக் குறைந்த அளவினராக இருப்பதாலும் இறப்புச் சடங்குகளை அவர்கள் செய்யாததாலும் இறந்த செய்தியை (என். எஸ். எஸ்) நாயர் சங்கத்தில் அறிவிக்க அங்கிருந்து ஒருவர் இத்தகையை சடங்கு முறைகளைச்செய்ய அனுப்பிவைக்கப்படுவர்.

கணவன் இறந்தால் மனைவி படுத்துக்கிடந்து அழுவதுதான் வழக்கம். 24 மணிக்கூருக்குள் அப்பிணத்தைப் புதைப்பது வழக்கம். ஒருவர் இறந்தது முதல் புதைக்கும் வரை வீட்டில் அடுப்பில் தீயேற்றும் வழக்கமும் உணவு உண்ணும் வழக்கமும் இல்லை. இறந்தவர் உடலை எடுத்த உடனே உறவினர்கள் போகவேண்டும் இல்லாவிட்டால் நிழலெடுத்த பின்புதான் போகவேண்டும் என்பது வழக்கம். நிழலெடுத்தல் என்பது இறந்தவரை படுக்கவைத்த இலையை சுத்தம் செய்த பின்பு தான் போகவேண்டும். இறந்தவர்களைப் படுக்க வைத்திருந்த வாழையிலை பூ வாய்க்கரிசி போன்றவற்றை மருமக்கள் எடுத்து அதனைத் தெக்குப் பக்கமாகக் கொட்டி சுத்தம் செய்யவேண்டும்

அடக்கத்திற்குச் சென்றோர் வரும் முன்பாக உப்பிடாமல் பாசிப்பயரை வேகவைத்து கட்டன் தேயிலையுடன் (Plane tea) கொடுப்பர். அடக்கத்தைமுடித்து வந்தவர்கள் குளித்த பின் இவற்றை உண்பர். சில சமூகத்தில் பிணத்தை எடுத்த்வுடன் வீட்டைக் கழுகுவர் இவர்களிடம் அன்றையதினம் வீட்டை கழுகும் வழக்கம் இல்லை. இறந்தவர் வீட்டை 18, 16 நாட்கள் தீட்டாகக் கருதக்கூடிய வழக்கம் உண்டு. இன்று இது 16 நாட்களாகச் சுருங்கியுள்ளது. இந்நாட்களில் உறவினர்கள் ஒருவரும் வீட்டைவிட்டுச் செல்லக்கூடாது. இவர்கள் உடுத்த துணி வகைகளை சஞ்சயன தினத்திற்கு முன்னதாக அதாவது 15ஆவது நாள் வண்ணானை அழைத்துவந்து துணிகளை வெளுக்கப் போடுவது வழக்கம். ஒவ்வொரு துணிகளுக்கும் இன்று 20 ரூபாய் வழங்குவர். இதுபோக வண்ணார் படியும் வழங்குவர். இவ்வழக்கம் இன்றும் காணப்படுகிறது.

### தீமூடுபட்டினி

சஞ்சயனத்தினத்தின் முந்தின நாள் தீமூடுபட்டினி என்னும் சடங்கு கொண்டாடப் படுகிறது. தீமூடு பட்டினி என்பது சஞ்சயனத்தின் முந்தின நாள் சாயங்காலம் பாசிப்பயிறை வேகவைத்து தேநீருடன் வந்தவர்களுக்கும் உறவினர் களுக்கும் வழங்குவர். தொடர்ந்து இறந்தவர்களுக்குப் பிடிக்கும் அவர்களது ஆடை, ஒரு சொம்பு தண்ணீர், பல் தேய்ப்பதற்கான உம்மிக்கரி, நாக்குவழிப்பதற்கான ஈர்க்கில், இவற்றையும் அவரது ஆடையையும் ஒரு பலகையில் வைத்து வீட்டின்முன் பச்சைத் தேங்காயைத் திரிகி அந்த துருவலை எரிப்பர் அந்த கனலோடு கூடின தேங்காயை மருமகள் பின்காலால் தள்ளிவிட்டி இறந்தவர் பெயரைச் சொல்லி அல்லது உறவு முறையைச் சொல்லி அழுது கொண்டு திரும்பிப் பார்க்காமல் வீட்டிற்குள் செல்ல வேண்டும். இச்சடங்கையே ‘தீமூடுபட்டினி’ என்பர்.

### சஞ்சயனம்

இறந்தவர்களுக்கு செய்யப்படும் மற்றொரு சடங்கே சஞ்சயனம். இச்சடங்கு ஐந்தாவது நாள், ஏழாவது நாள் ஒன்பதாவது நாள், பதினாறாவது நாள் என்ற முறையில் நடத்தப்படுகிறது. இளம்வயதினர் இறப்பின் ஐந்தாவது நாளும் முதிர்ந்தவர் இறப்பின் ஒன்பதாவது, பதினாறாவது நாளும் இச்சடங்கு நடத்தப்படுகிறது. சஞ்சயனத்தன்று காலை, பனி நீர், கோமூத்திரம். பால் தயிர், இளநீர் இவற்றை எடுத்துகொண்டு அடக்கம் செய்த இடத்திற்குச் செல்வர். இறந்தவரை எரித்த தலை, வயிறு, கால் பாகத்திலுள்ள எலும்புகளை மண் வெட்டியால் வெட்டிக் கொண்டு சென்ற, ஒவ்வொரு நீரிலும் அவ்வெலும்புகளைக் கழுகி சுத்தம் செய்வர். பின்னர் அவற்றை வெள்ளைத்துண்டில் வைத்து அரித்து மூன்று கலயத்தில் வைப்பர். ஒன்றை அன்றைய தினம் கடலில் கொண்டு கரைப்பர். மற்றதை வீட்டின் முன் அஸ்திமாடத்தைக் கட்டி அதில் ஒருகலயத்தை வைத்து மாலை நேரத்தில் விளக்கேற்றி வழிபடுவர். கணவன் இறந்தால் மனைவி தன் ஆயுள் நாள் முழுதும் விளக்கேற்றி வணங்கும் வழக்கம் உண்டு. தற்போது அம்முறை மருவி 41 நாள் மட்டும் விளக்கேற்றிவைக்கும் மரபு காணப்படுகிறது.

ஒருவர் இறந்து சஞ்சயனம் முடியும் வரையிலும் எண்ணையில் சுடும் தோசைகள் ஒன்றும் இறந்தவர் வீட்டில் செய்யக் கூடாது. பதினாறாவது நாள் எண்ணெய் குளியல் முடித்து அதாவது எண்ணெய் தொட்டுக்குளித்த பின்புதான் தோசை சுடும் வழக்கம் உள்ளது. பதினாறு நாள் வரையும் மீன் முட்டை, இறைச்சி உட்பட்ட புலால் உணவு உட்கொள்ளும் வழக்கம் இல்லை.

பதினாறாவது நாள் சஞ்சயனத்தன்று படைக்கும் உணவில் ஏதேனும் ஒரு புலால் உணவை பரிமாறுவர். இறந்தவர்கள் பதினாறு நாள்வரையும் அவ்வீட்டில் உறைவதாகவும் அவர்கள் கடவுள் தன்மை அடைந்ததால் புலால் உணவை உட் கொள்ளக் கூடாது என்றும் நம்புகின்றனர்.

சஞ்சயனம் முடிந்து மறு பத்தாவது நாள் வீட்டில் வைத்து இறந்தவர்களுக்குப் பலியிடும் வழக்கம் உண்டு. பலியிடுதல் என்பது எள்ளு, பாசிப்பயிறு, பாகற்காய், வழுதுணை, வெல்லம், பால், அரிசி போன்றவற்றை வீட்டிற்கு வெளியே அடுப்பு கூட்டி வேகவைப்பர். பின்னர் தர்ப்பப்புல்லை கையில் கட்டி கையைக் மூன்று முறைத்தட்டி சமைத்த உணவை மேடான இடத்தில் காகத்திற்குப் படைப்பர். இவ்வுணவை மீன்களுக்கும் நீர் நிலைகளில் சென்று தண்ணிரில் போடுவர். இறந்தவர் இவ்வுயிரினங்களின் வடிவில் வந்து உணவை உண்பதாக நம்புகின்றனர். இவ்வழக்கம் இன்று நீர் நீலைகளில் சென்று பலிசெய்யும் வழக்கமாகக் மாறியுள்ளது. ஓணத்தின் முன்புள்ள அமாவாசை (கர்க்கிடக வாவு) அன்று இறந்தவர்களுக்கு இத்தகைய நீர் நிலைகளில் சென்று பலியிட்டு இறந்தோர்களை வழிபட்டு வருகின்றனர். இதனைச் செய்பவர் மூத்த மகனாகத்தான் இருக்கவேண்டும்.

ஒருவர் இறந்த அடக்கம்செய்த அடுத்த நாள்முதல் சஞ்சயனம் வரை பலியிடுவர். அதன்பின் இறந்து 20 ஆவது நாள் 41 ஆவது நாள் ஒவ்வோரு மாதமும் இறந்த நட்சத்திரத்தன்றும் பலியிடும் வழக்கம் உண்டு. பலியிடுவோர் வீட்டின் முன் ஓலையால் கட்டிய வீட்டில்தான் தங்கவேண்டும். என்ற வழக்கம் இருந்தது, இன்று வீட்டின் முன் வீடுகட்டும் வழக்கம் இல்லை. பின்னர் நற்பத்தியோராவது நாள் மூன்று வகையான பண்டங்களைச் செய்வர். ஒரு பண்டம் எண்ணெயில் பொரித்ததாகவும் இரண்டு பண்டங்கள் ஆவியில் வேகவைத்ததாகவும் இருக்க வேண்டும். அவ்வுணவுகளை இறந்தவரை எரித்த இடத்தில் படையலாக வைப்பர். மீதியுள்ள பண்டம் பலகாரங்களை வரும் விருந்தினர்கள்அனைவருக்கும் கொடுத்துவிடுவர். இவ்வாறு பண்டங்களை கொடுத்துவிடுபவர் மருமகளாகத்தான் இருக்கவேண்டும். மேலும் நாறப்பத்தியோராவது நாள் இரவு இறந்தவர்களின் நெருங்கிய உறவு முறையினர் ஒரு ஓலைக்கட்டை (சூட்டை) தீயேற்றி இறந்தவர்களை எரித்த இடத்தில் மூன்று முறை வலம் வந்து “வா! வா! என்று அழைத்து இவ்வீட்டின் அனைவருக்கு நீ கடவுளாக இருந்து காப்பாற்ற வேண்டும் என்று வேண்டி” திரும்ப வீட்டிற்கு வருவர். அவர்கள் கொண்டுவந்த தீக்கட்டையைத் தெக்குமுகமாக எறிந்துவிட்டு திரும்பிப்பார்க்காமல் வீட்டிற்குள் நுழைவர், இவ்வாறு பலவகையான இறப்புச சடங்குகள் கேரள வாழ் நாயர் சமூகத்தினர் இன்றும் செய்து வருகின்றனர். பல சடங்குகள் வழக்கொழிந்தன. பல மருவிய நிலையில் இன்றும் செய்துவருகின்றனர்.

## இதர சடங்குகள்

ஒவ்வொரு நாயர் சமூகத்தினருக்கும் குலக்கோயில் (குடும்பக்கோயில்) ஒன்று உண்டு. அக்கோயிலில் இசக்கி, மாடன், மருத (இறந்த முன்னோர்கள்) போன்றோரை வழிபட்டு வருகின்றனர். இறைவனை வழிபடுவதற்கென்று வீட்டிற்குள் ஒரு அறையை பூசையறையாக வைப்பர். குலக்கோயில் வீட்டிற்கு வெளியே அமையும். வீட்டிலுள்ளோரே இக்கோயில்களில் செவ்வாய், வெள்ளி ஞாயிற்றுக் கிழமைகளில் பூசை செய்வர். விசேச நாட்களிலும் பௌர்ணமி அமாவாசை நாட்களிலும் பிராமணர்களை அழைத்து பூசை செய்வர். இவர்கள் வழிபடும் இசக்கியம்மனுக்கு ஒரு தோற்றக் கதையைக் கூறுகின்றனர்.

முன்பு நாயர் சமூகத்தில்கணவனை இழந்த பெண்ணொருத்தி தன் மகளுடன் அவளது தாய்வீட்டில் வசித்து வந்தாள். அவளைப் பிடிக்காத அண்ணன் மனைவி (அண்ணி) ஏதேனும் குற்றம் கூறி அவர்களை வீட்டைவிட்டுத் துரத்துவதற்குத் தக்க சமயம் பார்த்து வருகின்றாள். ஒரு நாள் வீட்டின் அருகில் உள்ள கணிகையர் குல (கணிச்சி) வீட்டில் சென்று தீக்கனலை வாங்கிவரும்படி அண்ணியார்பணிக்க அப்பெண் தீக்கனல் வாங்குவதற்காகச் செல்கிறாள். சிரட்டையில் தீகனலோடு வரும்போது கை சுடவே சூடு தாங்காமல் விரலை நாக்கில் வைத்து நக்கியவாறு வீட்டை அடைகிறாள். அப்போது அப்பெண்ணின் அண்ணி தன் கணவனிடம் உங்கள் தங்கை கணிச்சியின் வீட்டில் சென்று ஏதோ வாங்கிச் சாப்பிடுகிறாள் என்று பழி சாற்றுகிறாள். கணிச்சியர் தாழ்ந்த குலத்தவராவர். அவர்கள் வீட்டில் சென்று உணவு உண்பது அன்றைய சமூகத்தினரால் வெறுக்கப் பட்டிருந்தது. எனவே அண்ணன் தனது தமக்கையைத் திட்டவே ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருந்த அப்பெண் செய்யாத தவறை பொறுக்க முடியாமல் அருகில் உள்ள குளத்தில் சென்று தன்மகளுடன் உயிரை மாய்க்கிறாள். இதனடிப் படையிலேயே இசக்கியம்மன் கோயில்களில் தாய் குழந்தையோடு நிற்கும் காட்சியான உருவச் சிலைகளை அமைக் கின்றனர். இந்நிகழ்வு நாயர் சமூகத்தில் நடந்ததால் இதற் குப்பின் நாயர் சமூகத்தினர் அனைவரும் இவ்வம்மனை தங்கள் குலதெய்வமாக ஏற்று கோயில் அமைத்து வழிபட்டு வருகின்றனர். இக்கோயிலில் மாடனையும் வழிபடுவர். அதன் அருகில் அக்குடும்பத்தில் (மறுதா) முன்னர் இறந்தவர்களில் நினைவாக ஆல்த்தரைவைத்து வழிபட்டு வருகின்றனர். அதன் அருகில் நாகத்தையும் வழிபட்டு வருகின்றனர். நாகத்திற்கென்று காவும் அமைத்து வழிபடுகின்றனர்.

நாகதோசம் தீர்ப்பதற்கென்று வீடுகளின் பின்புறத்திலுள்ள காவுகளில் களம் வரைத்து நாக தோசத்தை தீர்க்கும் மரபு இருந்தது. பாம்பினை அடித்து கொன்றாலோ பெண்களின் தீட்டுத்துணி வாயிலா கவோ நாகதோசம் வருவதாக நம்புகின்றனர். அவ்வாறு நாகதோசம் உடையோர் அதனைத் தீர்ப்பதற்கென்றும் மகப்பேறு வேண்டியும் களம் வரைத்து நாகத்தை வழிபடுகின்றனர். நாகத்தின் படத்தை பலவர்ண நிறப்பொடிகளால் களம் வரைவர். அதற்கு முன் வாழை இலையில் நெல், அரிசி, வெற்றிலை, பாக்கு, பூ, குத்துவிளக்கு போன்றவற்றை வைத்து பூசை செய்கின்றனர். இதனை தலைமைப் புள்ளுவன் செய்கிறார். அக்களத்தில் பாதாதிகேசம், கேசாதிபாதம் என்னும் அமைப்பில் நாகத்தின் உருவங்களை வரைவர். உருவத்தின் வெளிபாகங்கள் அரிசிப் பொடியால் வெண்மை நிறத்தில் வரையப் படுகிறது. உள்பாகங்கள் மஞ்சள்பொடி, பச்சை நிறப்பொடி, காப்பிப் பொடி, சிவப்புப்பொடி போன்றவற்றால் அலங்கரிபர்.

களம் எழுதி முடித்தபிறகுக் களத்தின் நான்கு மூலைகளிலும் குத்து(நில) விளக்கு ஏற்றிவைக்கப்படுகிறது. இவற்றுடன் குறிப்பிட்ட இடங்களில் வாழை இலையில் நெல்மீது இளநீரும், அரிசி மீது தேங்காயும் வைக்கப்படுகிறது. கோவில் அல்லது வீட்டு வாசலுக்கு முன்னால் வாழை இலைகளில் பச்சரிசி, அவல், பழம், பொரி, இளநீர், வெற்றிலை, பாக்கு என்பன படைக்கப்பட்டும் புள்ளுவர்களால் வழிபாடு துவங்கப்படுகிறது. ஊர் மக்கள் அனைவரும் களத்தை வழிபடுவர். வழிபாட்டுடன் இணைந்து புள்ளுவன் பாட ஆரம்பிப்பான். அக்களத்தில் இரண்டு சிறுமியர் பட்டுச்சட்டை அணிந்து இருப்பர். இவர்கள் பாட்டு இசைக்கும் போது இச்சிறுமிகள் மீது

நாகம் வர அவர்கள் அக்களத்தை தன் தலை முடியால் சுற்றி சுற்றியும் தங்கள் கைகளில் உள்ள தென்னம் பூக்குலையாலும் அக்களத்தை அழிப்பர். இறுதியாக அக்களத்தில், சுற்றிலும் கட்டிய தோரணங்கள் வரைக்கும் அவிழ்க்கப் படுகிறது இவ்வாறு செய்தால் நாகதோசம் மாறும் என்றும் மகப்பேறு பாக்கியம் கிட்டும் என்றும் குடும்பத்தில் செழிப்பு உண்டாகும் என்றும் நம்புகின்றனர். இவ்வாறு களத்தில் சிறுமிகள் மீது நாகம் வருவது தாய்வழிச்சமூகத்தின் எச்சமாகக் கருதப்படுகிறது. ஒரு காலத்தில் வீடுகளிலும் கோயில்களிலும் நிகழ்த்தப்பட்ட இச்சடங்கு இன்று கோயில்களோடு நிலைத்து விட்டது.

**முடிவுரை**

கேரளவாழ் நாயர் சமூகத்தில் பலவகையான தனித்துவமான சடங்குகள் நிகழ்த்தப் படுகின்றன. அவர்களது வாழ்வியல் சடங்குகள் பெருவாரியாக மருவிய நிலையிலேயே காணப்படுகின்றன. பல சடங்கு முறைகள் வழக்கொழிந்தன. இன்று நிகழ்த்தப்படும் சடங்குகளுக்கான காரணங்கள் தெரியாமல் ஏதோ சடங்குக்காகவே செய்கின்றனர். இக்கட்டுரை வாயிலாக நாயர் சமூகத்தினரின் வாழ்வியலில் காணலாகும் இறப்புச் சடங்கை ஓரளவுக்கு அறிந்து கொள்ளலாம்.

## பார்வை நூல்கள்

அச்சுதன் வாரியர், எஸ். கேரள சம்ஸ்காரம், கேரள பாஷா நிறுவனம், திருவனந்த புரம், இந்தியா, 2012.

கவிதா, த. மலசர் பழங்குடிகள், அருள் பதிப்பகம், சென்னை, தமிழ் நாடு இந்தியா, 2011.

கோபிநாதன், இரா. மலையாள இலக்கிய வரலாறு, சாகித்திய அகாதெமி புதுதில்லி, இந்தியா, 2014.

பக்தவத்சல பாரதி. தமிழர் மானிடவியல், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம், தமிழ் நாடு, இந்தியா, 2002.

பக்தவத்சல பாரதி. பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம், தமிழ் நாடு, இந்தியா, 2009.

தகவலாளர். முனைவர் அஜிதா குமாரி, ஓ. பட்டம் தாணுபிள்ளை மெம்மோரியல் கல்லூரி, தனுவச்சபுரம், இந்தியா.

## To cite this article

*****************

Hepsy Rose Mary, A. (2024). நாயர் சமூகத்தினரின் வாழ்வியலில் இறப்புச்சடங்குகள். *Sparkling International Journal of Multidisciplinary Research Studies, 7*(4), 43-49.

**************************************************************************************

## ABOUT THE AUTHOR



***Dr Hepsy Rose Mary, A.*** *working as an Associate Professor and Head, Department of Tamil, University of Kerala, Kerala. She got a Ph.D in Kerala University on the Topic Veerachozhiyam and Neminatham A Comparative Study. She has published six books and seventy five articles in various journals in that twenty articles are published in UGC Referred journals. She also participated and conducted so many National and International seminars. She conducted four batches of Refresher Courses for College and University teachers. She won Best faculty award and Aayvuchemmal award. She has completed three minor project and doing one Major Project.*

***************************************************************************************